பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை 19.12.2023 கதிர் 403

# உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான மக்கள் கருத்தறியும் பணி குடாநாட்டில் தொடக்கம்

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கானஇடைக்காலச் செயலகம் தேசிய ரீதியாக பொது மக்கள் கருத்தறியும் நடவடிக்கையை வட மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் தொடங்கியுள்ளது.

சிவில் சமூக அமைப்புகள், மதத் தலைவர்கள், சிரேஷ்ட பேராசிரியர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சமூக அமைப்பு பிரதிநிதிகள், பெண் உரிமை இயக்கங்கள்உள்ளிட்ட முக்கியபங்குதாரர்களுடன் டிசெம்பர் 10 முதல் டிசம்பர்12வரைஇதுதொடர்பான சந்திப்புக்கள் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால செயலக அதிகாரிகள் குழுவின் யாழ்ப்பாணப் பயணமானது, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான திட்டம் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருப்பது குறத்து சர்ச்சை வெடித்துள்ளது. முதலில் சீனாவிற்கு வழங்கப்பட்டிருந்த இந்தத் திட்டம் இந்திய அரசின் கடும் எதிர்ப்புக் காரணமாகப் பின்னர் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. அந்த இந்திய நிறுவனம் தனது கேள்வி கோரலை விலக்கிக்கொண்ட பின்னரும் அதற்கு திட்டத்தைக் கையளிக்கும் முடிவு அமைச்சரவையால் எடுக்கப்பட்டுள்ளதுஎன்பதேஇப்போது ஏற்பட்டுள்ள சர்ச்சை.

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலதீவு ஆகிய இடங்களில் ☞2

# 24 மணி நேரத்தில் 2,100 பேர் கைது

'யுக்திய' என்று பெயரிடப்பட்ட விரைவான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கையில், களமிறங்கிய பொலிஸார் கடந்த 24 மணி நேரத்திற்குள் 2,100 க்கும் மேற்பட்ட நபர்களை கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பாதாள உலகக் குழுவினருக்கும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கும் நெருக்கடியைஏற்படுத்தும்விதத்தில்இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான நடவடிக்கையில்; 2,020 ஆண்களும் 101 ☞2

# அயலுறவு கொள்கைகளில் சாதக மாற்றத்திற்கு நகர்வு

### ஜனாதிபதியே அறிவிப்பு

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் சாதகமான மாற்றத்திற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தியத்தலாவ இலங்கை இராணுவக் கல்வியற் கல்லூரியில் வர்ணங்கள் வழங்கல் மற்றும்விடுகைஅணிவகுப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1978ஆம் ஆண்டு நான் இளைஞர் விவகார அமைச்சராககடமையாற்றியபோதேஇராணுவத்தில் பல்வேறு சீர்திருத்தங்களை முன்னெடுக்கப்பட்டது. அப்போதையஇராணுவத் தளபதிமறைந்தஜெனரல் டென்னிஸ் பெரேரா அவர்கள், தியத்தலாவில் இராணுவக்கல்லூரியை நிறுவுவதற்கு ஆதரவளிக்குமாறு என்னிடம்கோரிக்கை விடுக்கப்பட்டது.

அப்போது அவர், பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்தனவிடம் இது குறித்து தெரிவித்ததுடன், அதன்படி இந்த கல்லூரியை அமைப்பது குறித்துஆலோசித்தோம். தியத்தலாவைக்கு வழங்கக்கூடிய சிறந்த விடயம் இராணுவ கல்லூரியே என்பதை நான் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினேன்.

இப்போது இங்கு கூடியிருக்கும்வருங்கால உத்தியோகத்தர்களின் விளக்கவுரைகளைக் கேட்கும் போது, அன்றைய தினம் நாம் எடுத்த சரியான தீர்மானத்தையிட்டும் இந்த கல்லூரி தொடர்பிலும் பெருமைப்பட ☞2

# பழுதடைந்த விதை உ.கிழங்கை பயன்படுத்தாதிருக்க தீர்மானம்

### பக்றீரியாத் தொற்றால் 20 தொன் நாசம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் களஞ்சிய அறையில் பழுதடைந்த 20.75 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு விதைகளை பயன்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது .

யாழ்ப்பாண மாவட்டத்தில்விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த உருளைக்கிழங்கு விதைகள் பழுதடைந்தமை சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் குறித்த தீர்மானம் எட்டப்பட்டது.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட களஞ்சியமொன்றில் வைத்திருந்த 20.75 மெற்றிக்தொன்உருளைக் கிழங்கு விதைகளில் பெரும்பாலானவை பழுதடைந்த நிலையில் காணப்பட்டதாக விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த விடயம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர்,பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், திட்ட பணிப்பாளர் குறித்த களஞ்சியசாலைக்கு ஞாயிற்றுக்கிழமை சென்று பார்வையிட்டதோடு பெருமளவான உருளைக்கிழங்கு விதைகள் பாதிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தினார்.

இதுதொடர்பில் ☞2

# அதிபர் நியமனத்தில் பெரும் அநீதி யாழ். மாவட்டத்தில் போர்க்கொடி

### ஆசிரியர் சேவைச் சங்கம் ஆளுநருக்கு மனு



யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய அதிபர் நியமனத்தில் அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவித்து வடக்கு ஆளுநர் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின்செயலாளர்ஆகியோருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

ஆசிரியர் ☞2

# யாழ். மாவட்டத்தில் மழையால் 8 வீடுகள் சேதம்: 250 போர் பாதிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக 71 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எட்டுவீடுகள்பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணமாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின்உதவிப்பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் குறித்த விடயத்தை தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் 60 குடும்பங்களைச்சேர்ந்த 205 பேரும் கோப்பாய் பிரதேசசெயலகபிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும்

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் ☞2

# சுகாதாரத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் கைது

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற ஹியுமன் இமியூனோ குளோபியூலின் மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில், வாக்குமூலம்வழங்குவதற்காக நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜரானநிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மருந்தை சுகாதார அமைச்சுக்கு வழங்கியதாககூறப்படும் நிறுவனத்தின் உரிமையாளர், மருந்துவிநியோக பிரிவின் முன்னாள் பணிப்பாளர், வைத்தியர் கபில விக்ரமநாயக்க உள்ளிட்டோர்கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்படடுள்ளனர்.

சர்ச்சைக்குரிய மருந்தை போலி ☞2

# மில்கோ நிறுவனத்தினது தலைவர் பதவி விலகல்

மில்கோ நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து ரேணுக பெரேரா,இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களினால்தான்பதவியை இராஜினாமாசெய்வதாக நிதி அமைச்சின் செயலாளருக்கு அவர் கடிதமொன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளராகசெயற்படும் ரேணுக பெரேராவிற்கு கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மில்கோ நிறுவனத்தின்ஊழியர்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். மில்கோ நிறுவனத்தின் தொழிற்சங்க ஒன்றியமும் இவருக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

எஞ்சிய சம்பளப் பிரச்சினை தொடர்பில் ஆரம்பத்தில் ☞2

# தொடர் மழையால் 50 குளங்கள் வான் பாய்கின்றன

பலத்த மழையுடன் கூடிய வானிலையால் 50 இற்கும் மேற்பட்ட பிரதானநீர்த்தேக்கங்கள் வான்பாய்வதாக நீர்ப்பாசனதிணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சுதர்ஷனிவிதானபத்திரன குறிப்பிட்டுள்ளார்.

அவர், பிரதான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 80 வீதம் வரை உயர்வடைந்துள்ளதோடு மக்கள் மல்வத்து ஓயாவைபயன்படுத்தும் போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்

மல்வத்து ஓயாவின் தாழ்நிலப்பகுதி மக்களுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது. நில்வலா கங்கையின் தாழ்நிலப் பகுதிகளிலும் தொடர்ந்தும் ☞2

# ஆட்சிகள் மாறினாலும் மாறாத டிஜிட்டல் பொருளாதாரம் வரும்

### தொழில்-நுட்ப இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

ஆட்சிகள் மாறும் போதும் மாற்றம் அடையாத டிஜிட்டல்பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகதொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்படும் வரை, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கைநுண்ணறிவு பற்றிய வார்த்தைகள் இந்த நாட்டில் மிகவும் குறைவாகவேபயன்படுத்தப்பட்டன. ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையினால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை ☞2

## இனி இது .....

ஹைபிரிட் மறுசுழற்சி மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கானஒப்பந்தத்தையு சோலர் கிளீன் எனர்ஜி சொலூசன்ஸ் (U Solar Clean Energy Solutions (Pvt) Ltd) நிறுவனத்திற்கு வழங்குவதற்கு திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

இந்த திட்டத்திற்கு இந்தியா 11 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தை வழங்கிய பின்னர் திட்டத்தைச் செயற்படுத்தும் பணிகளை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சரவைப் பத்திரத்தின்படி, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டகொள்முதல்குழுவின் முழுமையான மதிப்பீட்டிற்குப் பிறகு ஒப்பந்தம் இந்தியாவின் ஷீ சோலார் கிளீன் எனர்ஜி சொல்யூஷன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்திற்காக இரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அந்த திட்டத்தை செயல்படுத்த இந்திய ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மட்டுமே கேள்வி கோரப்பட்டுள்ளது.

மதிப்பீட்டின்பின்னர்அமைச்சர்கள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் U–Solar Clean Energy Solutions (Pvt.) Ltd.க்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு மின்சாரம் மற்றும் மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் அதற்கு முன்னதாகவே அந்த நிறுவனம் தனது கேள்வியைத் திரும்பப் பெற்றுவிட்டது தற்போது தெரியவந்திருக்கிறது.

யு சோலர் கிளீன் எனர்ஜி நிறுவனத்தின பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான கெ.ஆர்.ஹரிநாராயணன் டிசெம்பர் 17 திகதியிட்டகடிதத்தில், இலங்கை நிலையான எரிசக்தி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின்கொள்வனவுக்குழுவுக்கு தனது கேள்வியைத் திரும்பப் பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

அவர்களின் தற்போதைய பொறுப்புகள் மற்றும் வளங்களை (டாலர் விகிதங்கள்) கவனமாகப் பரிசீலித்து மறுமதிப்பீடு செய்த பின்னர் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும், மேலும் அவர்களால் ஏல செயல்முறையை தொடர முடியவில்லை என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி ஏலத்திலிருந்து ஏற்கனவே விலகிவிட்ட நிறுவனத்திற்கே அமைச்சரவை அந்த ஒப்பந்தந்தை வழங்கியுள்ளது என்பதே இப்போது எழுந்துள்ள சர்ச்சை.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## உண்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்திற்கானநிலையானகட்டமைப்பை உருவாக்குவதற்கான விடயங்கள் மற்றும்பரிந்துரைகளைசேகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தடையாக உள்ள சமூக சவால்கள் மற்றும் முக்கிய பிரச்சினைகள்பற்றியவிரிவாகஇந்தச் சந்திப்புக்களில் ஆராயப்பட்டன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பிரதம குருக்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ் மறைமாவட்ட ஆயர் வண.கலாநிதி ஜெஸ்ரின் பீ ஞானப்பிரகாசம், யாழ் நாக விகாரையின் தம்மிக தேரர் உள்ளிட்ட மதத் தலைவர்களுடன் இடைக்காலச் செயலக அதிகாரிகள் குழு முக்கிய கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

பொதுமக்களின் எதிர்பார்ப்புகள், கருத்துக்கள் மற்றும் கவலைகள் தொடர்பில் சமயத் தலைவர்கள் இதன் போது கருத்துத் தெரிவித்ததுடன், நாட்டில் இன நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு நல்லிணக்க செயற்பாடுகள் வெற்றியடைய பிரார்த்தனை செய்ததுடன் ஆசிகளையும் வழங்கினர்.

இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச, இடைக்கால செயலகத்தின் செயற்பாடுகள் குறித்து மதத் தலைவர்களுக்கு விளக்கமளித்ததுடன், பாராளுமன்ற சட்டத்தின்மூலம்ஸ்தாபிக்கப்படவுள்ள உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்தவிளக்கங்களைவழங்கினார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான கொள்கைக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன், இடைக்கால செயலகம் சிவில் சமூக அமைப்புகள், யாழ்ப்பாணத்தின் சிரேஷ்ட அரச அதிகாரிகள், யாழ் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட கல்வியியலாளர்கள், துறைசார் நிபுணர்கள், இளைஞர் குழுக்கள், பெண் உரிமை அமைப்புப் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களையும் திரட்டியது.

இந்த ஆலோசனைகள் சமூகத்தின் பல்வேறுபிரிவுகளின்எதிர்பார்ப்புகள் மற்றும்கவலைகள்பற்றியவிரிவான புரிதலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முக்கிய பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட விரிவான பொது ஆலோசனைச் செயல்பாட்டில் பணிப்பாளர் நாயகத்தின் நிறைவேற்று மற்றும் சட்ட அதிகாரி அஷ்வினி ஹபங்கம, கொள்கைப் பிரிவுப் பிரதானி கலாநிதி யுவி தங்கராஜா, இடைக்கால செயலகத்தின் மக்கள் தொடர்பு மற்றும்கொள்கைப்பிரிவைச்சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரும் இதில் பங்கெடுத்திருந்தனர்.

## 24 மணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்க கைது செய்யப்பட்டனர். அவர்களில் 12 சந்தேகநபர்கள் விளக்கமறியலில்வைக்கப்பட்டனர். 133 பேர் புனர்வாழ்விற்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போதுகஞ்சா மற்றும் மரிஜுவானா ஆகிய போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறத.

கைது செய்யப்பட்டவர்களில் கணிசமான பகுதியினர் மேல்மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளதோடு, பொலிஸ்விசேடபிரிவு மற்றும்பொலிஸ்போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நடத்தப்பட்ட தரவுத்தளங்களில் அடையாளம் காணப்பட்ட3,340சந்தேகநபர்களில் 116 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கையானது, போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகளை முழுமையாக ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்ட பரந்துபட்ட முயற்சி என்கிறது பொலிஸ்.

இலங்கை பொலிஸாரின்; போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் சிறப்புப் பணியகம் உட்பட ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் கூட்டு முயற்சிகளின் மூலம் தற்போதைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகயில், 200 இராணுவத்தினர், 200 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் 50 உயரடுக்கு பொலிஸ்விசேடஅதிரடிப்படையினர் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## ஆட்சிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுண்ணறிவை இலகுவாகப் பயன்படுத்த முடியும்.

உலக நாடுகளில் இந்த முறைமைகளைப் பயன்படுத்தி, பொருளாதாரம் எவ்வாறு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதுஎன்பதைக் கண்டுகொள்ள முடிந்துள்ளது. முன்னேறும்உலகுடன்இணைந்து, நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இதன்படி, நாட்டின் பொருளாதாரத்தில் டிஜிட்டல் பொருளாதாரம் வழங்கி வந்த பங்களிப்பை 03 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச சேவையை டிஜிட்டல் மயமாக்குவதன்மூலம், செயற்திறன் மிக்க அரச சேவையைப் பேணுவதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது. அதன்மூலம்பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கும் ஆற்றல் கிடைக்கின்றது. தனியார் துறை ஏற்கனவே டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி வேகமாக முன்னேறிச் செல்கின்றது.

அதன் ஊடாக போட்டித் தன்மை கொண்ட சேவைகளை வழங்குவதற்கு அரச சேவையை வலுப்படுத்தும் ஆற்றல் டிஜிட்டல்மயமாக்கலுக்கு உண்டு. இந்த முழுமையான செயல் முறைகளின் மூலம் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றார்.

## அதிபர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் இருந்து அதிபர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டவர்கள் இதனால் பாதிக்கப்பட்டதாகவும் புள்ளியிடல் முறை மூலம் வழங்கப்பட்ட நியமனத்தை எதிர்ப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பாளர்,, வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆகியோருக்கும் மகஜரின் பிரதி கையளிக்கப்பட்டது.

மகஜரில், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சைப் புள்ளியின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டு, 4 வருட தாமதத்தின் பின்னரான நிலைப் படுத்தலில் பரீட்சைப் புள்ளியின் அடிப்படையில் மாத்திரம்

நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர

விரும்புகின்றோம். காரணங்கள் பின்வருமாறு

ஒரேபரீட்சையின்அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுக்கு இரு வேறு நியதிகளின்

அடிப்படையில் நியமனம் வழங்கியமை (முதற்கட்ட நியமனத்தின் போது வெளிமாவட்ட சேவை கருத்தில் கொள்ளப்பட்டு அதே மாவட்டத்தில் நியமனம் வழங்கியமை), வெளிமாவட்ட சேவையை கருத்தில் கொள்ளாதது ( ஆகக் குறைந்தது 5,7,10,15 வருடங்கள்), பொருத்தமான மருத்துவக் காரணங்களைக் கருத்திற் கொள்ளாமை, கணவன் மனைவிக்கிடையிலான நியமனம் இருவேறு மாவட்டம், வயது மற்றும் சேவைமூப்புகருத்திற்கொள்ளாமை,

கணவன் அல்லது மனைவி மருத்துவத்துறையின் கருத்தை கருத்தில் கொள்ளாமை, தனித்து வாழும் குடும்பங்களின் குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்திற் கொள்ளாமை, கணவன் அல்லது மனைவியின் வெளிமாவட்ட சேவை நிலையத்தைக் கருத்திற் கொள்ளாமை, கடமைநிறைவேற்று அதிபர்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் அப் பாடசாலைகளுக்குமுரண்பாட்டைத் தோற்றுவிக்குமுகமாக நியமனம்,

14 நாள் கால அவகாசம் தந்தும் கையொப்பமிட அனுமதிக்காமை,

192 புள்ளி பெற்றவருக்கு ஊர்காவற்றுறைகண்ணகிஅம்மன் பாடசாலையும் 188

புள்ளிகளைப் பெற்றவருக்கு கலட்டி அ.மி.த.க பாடசாலையும் வழங்கப்பட்டுள்ளது, திருமணமாகாத பெண் அதிபர்களின் நனிலமை கருத்திற் கொள்ளப்படாமை என்பன குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொடர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ள அபாயம் உள்ளது என்றார்.

இதேவேளை, 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. பதுளை, காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும்இரத்தினபுரிமாவட்டங்களின் பல பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

## சுகாதாரத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகதயாரித்துள்ளதாகநீதிமன்றத்தில் வெளிக்கொணரப்பட்டதுடன், அதனை நாட்டின் சுமார் 2000 நோயாளர்களுக்குவழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 38.4 மில்லிமீட்டர் அளவிலான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றார்.

## பழுதடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசவிவசாயஆராய்ச்சிஅபிவிருத்தி பிரிவு, விதைகள் ஆராய்ச்சி பிரிவு, கமலநலஅபிவிருத்திதிணைக்களம் என துறை சார்ந்த தரப்புக்களின் பங்கேற்புடன் விசேட கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் மாவட்டசெயலககேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது.

கலந்துரையாடலில் குறித்த நிலைமை ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பாக மாவட்ட செயலாளர்துறைசார்அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியதுடன் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாவட்ட செயலாளர் தீர்மானம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

உருளைக்கிழங்கு விதைகள் பாரதூரமான ஒருவகை பக்ரீரியவால் பாதிக்கப்பட்டதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. பழுதடையாதவற்றை தெரிவு செய்து பாவித்தாலும் மண்ணுக்கும் பயிருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே அதை பயன்படுத்தமாட்டோம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு ஆராயப்பட்ட விடயங்களை நவீனமயமாக்கல் திட்ட பிரிவுக்கும் வடக்கு ஆளுநர் மற்றும் விவசாய அமைச்சருக்கும் அறிவிக்க தீர்மானிக்கப்பட்டது

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மேற்கொள்பவைக்கு மாவட்ட மட்டத்தில் கருத்து கேட்பதில்லை என கூறப்பட்டது.

2024 ஆண்டு முதல் எவ்வித திட்டங்களாயினும்மாவட்டவிவசாய அபிவிருத்திகுழுகூட்டத்தின்அனுமதி மற்றும் ஆலோசனை பெறப்பட்டே செய்யப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது - என்றார்.-

## மில்கோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன்அதன்பின்னர்அவரின் நிர்வாக பலவீனங்கள் தொடர்பிலும் வெளிக்கொணரப்பட்டது.

இந்தபின்புலத்திலேயேரேணுக பெரேரா தனது இராஜினாமா கடிதத்தை நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ளார்.

மில்கோ நிறுவனத்திலிருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன்இணைந்துஅரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளதாக ரேணுக பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, மில்கோ நிறுவனத்தின் புதிய தலைவராக விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்மஹிந்தஅமரவீரவினால் இந்தநியமனம்வழங்கப்பட்டுள்ளது.

## அயலுறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாம். நான் சில நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டது போல், ஒரு இராணுவத்தின் தரம் அதன் அதிகாரிகளிலும் அவர்களின் திறமையிலும் உள்ளது. பயிற்சி மூலம் தான் அவற்றை அவர்கள் பெறுகிறார்கள்.

ஒரு தொழில்முறை இராணுவத்தைஉருவாக்கவேண்டுமாயின், பயிற்சியாளர்களின் பயிற்சி முகாம் முதல், உயர் அதிகாரிகள் உருவாக்கும் இடம் வரை, அனைத்து பிரிவுகளும் முறையாக பேணப்பட வேண்டும். இராணுவ உபகரணங்கள் எவ்வளவு தரம் கூடியதாக இருந்தாலும் முறையான பயிற்சி இல்லை என்றால், அந்த உபகரணங்களை வைத்திருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

மறுபுறம், உயர் தரத்திலான உபகரணங்கள் இருந்தாலும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாணவர்களை இணைக்கும் தொடக்க விழா!

இலங்கைதென்கிழக்குபல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுநிலை கற்கை நெறி மற்றும் முகாமைத்துவ முதுகலை உயர் டிப்ளமோ ஆகிய கற்கை நெறிகளை 2022ஃ2023 ஆம் கல்வியாண்டில் தொடர்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள, 12 ஆவது கட்ட மாணவர் அணியினரை இணைத்துக்கொள்ளும்தொடக்கவிழா, படிப்பு வாரியத்தின் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.எம். ஹிலால் தலைமையில் 17 ஆம் திகதி வர்த்தக முகாமைத்துவ பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நிகழ்வில் விசேட அதிதியாக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா எம்.ஜி.எச். அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கௌரவ அதிதியாகவும் பிரதான பேச்சாளராகவும் ரிச்லைஃப் டெய்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் தினேஷ் நல்லையா அவர்கள் நிகழ்நிலையாக



கலந்துகொண்டு உரையாற்றினார்.

முதுகலை பிரிவின் இணைப்பாளரும் நிகழ்வின் ஏற்பாட்டாளருமான பேராசிரியர் எஸ்.குணபாலன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

குறித்த கல்வியாண்டுக்காக கற்கை நெறியை தொடர்வதற்கு 25 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)




# கிழக்கு மாகாண கைப்பந்து போட்டியில் கல்முனை ஸாஹிராக் கல்லூரி வெற்றி!



இலங்கை பாடசாலை கைப்பந்து சங்கத்தால் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 12 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான கைப்பந்துபோட்டிமட்டக்களப்புவெளர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

சுழற்சி(லீக்)முறையில்நடைபெற்ற இப்போட்டித்தொடரில் 6 போட்டிகளில் விளையாடிய கல்முனை ஸாஹிரா கல்லூரி 4 போட்டிகளில் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் இரண்டாம் நிலையைப் பெற்றது.

போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும், மாணவர்களுக்கு பயிற்சியளித்து வழிப்படுத்தி அழைத்துச் சென்ற ஆசிரியர்களான எம்.வை.எம்.றகீப், எம்.எம். றஜீப் மற்றும்விளையாட்டுபயிற்றுவிப்பாளர் ஏ.எம்.ஜப்ரான் ஆகியோருக்கும் வாழ்த்துக்களையும்பாராட்டுக்களையும் பாடசாலை அதிபர் எம். ஐ. ஜாபீர் தெரிவித்துக்கொண்டுள்ளார். (05)

# நற்பிட்டிமுனை சமூக சேவை அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த முப்பெரு விழா!









நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியம் ஏற்பாடு செய்த முப்பெரும் விழா நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன் போது 2023 ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் செயலாளர் வீ.ரி.ஹனூன்தலைமையில்கடந்த சனிக்கிழமைஇடம்பெற்றநிகழ்வில் கிராஅத் ஓதலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து வரவேற்புரை மற்றும் விருந்தினர் உரைகள் இடையிடையே இடம்பெற்றன. அத்துடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் அரங்கேற்றம் செய்யப்பட்டன. சாய்ந்தமருது பிரதேசசெயலாளர்எம்.எம்.ஆஷிக், இலங்கைபோக்குவரத்துசபையின் கல்முனைசாலைமுகாமையாளர் ஜவ்பர், ஓய்வுபெற்றஅதிபர்ஏ.ஏ.கபூர், ஓய்வு பெற்ற ஆசிரியர் யூ.எல்.ஏ. கபூர், அதிபர்களான எம்.எல்.பதியுதீன், சி.எம்.நஜீப், திருமதிஏ.எம்.முனாஸிர் உட்பட மேலும் பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிய பொருளாளர் ஏ.எல்.ஜலில் நன்றியுரை நிகழ்த்தியதுடன் ஸலவாத்துடன் நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மக்கள் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம்!

## திருகோணமலையில் கூடியது



அகில இலங்கை மக்கள் காங் கிரஸின் திருகோணமலை மாவட்ட செயற்குழுக் கூட்டம்சனிக்கிழமைகட்சியின் தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்றூப் தலைமையில், கிண்ணியா, உப்பாற்று, ஹனான் தோட்டத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் தேசியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானஅல்ஹாஜ்ரிஷாத்பதியுதீன், தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, அரசியல் அதிகாரசபை உறுப்பினர் டாக்டர்.ஹில்மிமொகைடீன், கட்சியின் திருகோணமலைமாவட்டஉள்ளூராட்சி மன்றங்களின் முன்னையநாள் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும்கட்சியின்முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். (05)





காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமைச்சரின் கருத்து சரியா?

''போதைப்பொருள் விற்பனை செய்பவர்களுக்கும், பாதாளக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கும் நான் ஒன்றைக் கூறிக்கொள்கின்றேன். தயவுசெய்து இதனை நிறுத்திக்கொள்ளுங்கள். சண்டியர்கள் போல் இருப்பவர்கள் ஒருநாள் மரணிப்பார்கள். இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால், நாம் அவர்களைத் தேடிவருவோம். அவர்கள் ஒருவரையும் விட்டுவைக்கவேண்டாம் எனக் கூறியுள்ளேன்' என்று பொது மக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சர் டிரான் அலஸ் எச்சரித்திருக்கின்றார்.

மேலோட்டமாகப்பார்த்தால்இலங்கையைஅண்மைக்காலமாகப் பெருமளவில் அச்சுறுத்திவரும் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலை ஒழிப்பதற்கு ஆட்சியாளர்கள் எடுத்துள்ள கடும் நடவடிக்கையாக இது பாராட்டப்படக்கூ–டியதாகத் தோன்றும். இலங்கையின்எதிர்காலச்சந்ததியைஅழிக்கும்போதைப்பொருள் பயன்பாட்டை ஒருவரும் ஏற்றுக்கொள்ளவோ அனுமதிக்கவோ முடியாது. அது கட்டுப்படுத்தப்பட்டு ஒழிக்கப்படவேண்டியது என்பதிலும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

ஆனால், அதனை எப்படிச் செயற்படுத்துவது என்பது தொடர்பில் அமைச்சரின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. அமைச்சரின் கருத்து கிட்டத்தட்ட பகிரங்கக்கொலை மிரட்டலே. பாதாள உலகக் குழுவினரும் போதைப்பொருள் கடத்தல்காரர்களும் தமது செயற்பாட்டைத் தொடர்ந்தால் அவர்கள் கொல்லப்படுவார்கள் என்கிற தொனி அமைச்சரின் பேச்சில் உள்ளது. இது சட்டம் ஒழுங்கு அதிகாரிகளுக்கு அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் மேலதிக சுதந்திரத்தை வழங்கிவிடக்கூடிய ஆபத்தை ஏற்படுத்திவிடகின்றது. இதனால் சந்தேகநபர்கள் எந்தவித நீதிவிசாரணையும் இன்றிச் சுட்டுக்கொல்லப்படக்கூடிய ஆபத்தை விளைவிக்கும்.

இலங்கையின் படையினருக்கும் காவல்துறையினருக்கும் இவ்வாறான நீதிக்குப் புறம்பான கொலைகளில் நீண்ட அனுபவம் இருக்கின்றது. இதனாலேயே பன்னாட்டு அரங்கத்தில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை அவர்கள் பரவலாக எதிர்கொண்டு வருகின்றார்கள். அத்தகைய பின்னணியைக் கொண்டவர்களுக்கு ஊக்கமளிப்பது போன்று அமைச்சரின் கருத்துக்கள் அவைதானது நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மீண்டும் தலைதூக்குவதற்கான அனுமதி என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

இதனால் அமைச்சரின் கருத்து மனித உரிமைகள் ஆர்வலர்களால் கடும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நாட்டில் இடம்பெற்றுவரும் பொலிஸ்காவலின் கீழான சித்திரவதைகள்மற்றும்பொலிஸாரால்நிகழ்த்தப்படும்சட்டவிரோத படுகொலைகள் என்பன தொடர்பில் மனித உரிமை ஆர்வலர்கள் கரிசனைகளை வெளிப்படுத்திவரும் பின்னணியில், அமைச்சர் டிரான் அலஸின் கருத்து தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் (டுவிட்டர்) செய்திருக்கும் பதிவிலேயே மனித உரிமைகள் ஆர்வலரான அம்பிகா சற்குணநாதன் அமைச்சரின் கருத்தைக் கண்டித்துள்ளார்.

''போதைப்பொருள் வர்த்தகர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாகக் கொல்லப்படுவர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரால் அலஸ் அறிவித்திருக்கின்றார். போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக 'உச்சபட்ச அளவில் பாதுகாப்புத்தரப்பினரைப்' பயன்படுத்துமாறு தான் பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருக்கிறார் என்று அவர் முதலில் கூறினார்.

அது மாத்திரமன்றி 'நீங்கள் (போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும்பாதாளக்குழுவினர்) பொலிஸாரினால்அல்லது உங்களது எதிரியினால்கொல்லப்படுவீர்கள்என்பது உங்களுக்குத்தெரியும். நாங்கள் அவர்களை அடையாளங்காண்போம். அதன்பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு, அவர்கள் கொல்லப்படுவார்கள். அதனைத் தடுக்கமுடியாது எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்திருக்கின்றார்.

சட்டவிரோத படுகொலைகளே போதைப்பொருள் கடத்தலைக் கையாள்வதற்கு ஆட்சியாளர்கள் கொண்டிருக்கும் உத்தி என டிரான் அலஸ் அறிவித்திருக்கும் நிலையில், அது 'அரச கொள்கைக்கு' நிகரானதாகும். அரசின் இவ்வாறான செயற்பாடுகளும், மனித உரிமைகள் மீறப்படல் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப்புறந்தள்ளல்ஆகியவற்றுக்குஇடமளிக்கப்பட்டிருப்பதும் இலங்கையில் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு வேரூன்றுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன'' என அவர் அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுஉண்மையும்கூடசட்டத்தைக்கையிலெடுத்துகொலைகளை நிகழ்த்த எவருக்கும் அனுமதி வழங்கப்படக்கூடாது. அது ஆபத்தானது.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# பனையின் பழம்

அங்கம் -27



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

நாளும் பனம்பழத்தை
நல்லமுதா யுண்ணுங்கா

லாளும் கடப்பா
னழுகிரந்தி - நீழுமலஞ்
சிக்கும்பித் தத்தில்வளி
சேருதல் நோய்க்கனமு
தித்திக்கும்
பலக்குமெனச் செப்பு



எங்கள் கற்பகதருவாம் பனையின் பழத்தின் அருமை பெருமையை பதார்த்தகுண சிந்தாமணி எப்படிக் காட்டுகிறது பாருங்கள். பனம்பழம் எங்களின் வாழ்வில் முக்கியமான உணவாகவே இருந்து வந்திருக்கிறது.அது மட்டுமல்ல அதுபலநோய்களையேதீர்க்கும் மருந்தாகவும் விளங்கியும் வந்திருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.பனம்பழம் பற்றிய விழிப்புணர்வு மீண்டும் இப்போது எழத் தொடங்கி இருக்கிறது. தமிழகத்திலும், இலங்கையிலும் பனம்பழம் தொடர்பாக பல உணவுப் பதார்த்தங்களை ஆக்கி யாவருக்கும் கொடுக்கும் செயற்பாடுகள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையைக்கருத்திருத்தல் மிகவும்இனிப்பானசெய்தியாகும். எங்களின் மூதாதைகளின் மனங்கவர்ந்த பனம்பழத்தை இன்றுள்ளவர்களும் சுவைத்து அனுபவிக்க வேண்டும் என்னும் சிந்தனை எழுந்ததே பனம்பழத்தின் முக்கியத்துவத்தைக் காட்டி நிற்கிறது என்றுதான் எண்ணிட வைக்கிறதல்லவா !

யாழ்ப்பாணத்தில்உதயமான பனை அபிவிருத்திச் சபையானது பலபுதியமுயற்சிகளுக்குவித்திட்டு நிற்கிறதுஎன்பதைக்கருத்திருத்தல் அவசியமாகும்.துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுஇந்தச்சபையானதுபலஆக்க பூர்வமானதிட்டங்களையெல்லாம்





செயற்படுத்திவருகிறது என்பதை மறந்துவிட கூடாது.பனை அபி விருத்திச் சபையினால் பனம்பழம் புத்துயிர்ப்பினைப் பெற்று நிற்கிறது எனலாம். பன ம்பழத்தின் களியினைக் கொண்டு பல் வேறுவகையான உணவுப் பதார்த்தங்களை உருவாக்கி மக்கள் மத்தியில் அவற்றைப் பிரபலப்படுத்தி பனம்பழத்தினை மக்களின் மனங்களிலெல்லாம் நிலை பெற்றிட வைத்திருக்கிறது. இது பனம்பழத்தைப்பொறுத்தவரை நல்லதொரு ஆரோக்கியமான நிலையாகவே கொள்ளலாம் அல்லலவா !

பனம்பழத்தினின்றும் பனங்களியினைப் பிரித்தெடுப்பதற்கு நவீன முறைகள் கையாளப்படுகின்றன. அதில் நவீனமான இயந்திரங்கள் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். கைகளினால்கசக்கிப் பிழிந்து எடுத்த களியினை இயந்திரங்கள் மூலமாக எடுக்கும் பொழுது கிடைக்கும் பயன் நிறைவாகவே அமையும் நிலை காணப்படுகிறது. குறைந்த நேரத்தில் நிறைந்த பயனை அடைவதும் சாத்தியமாகிறது அல்லவா ! இயந் திரங்களைப் பயன்படுத்தி பனங்களியினை எடுப்பதற்கான உரிய பயிற்சிகளையும் பனை அபிவிருத்தி சபையானது வழங்கி வருகிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.யாழ்ப்பாண மாவட்டத்தில்காரைநகர் பகுதியில் பயிற்சிகள் வழங்கப்பட்டு ,

பனம்பழத்தின்களியினைக் கொண்டுபனாட்டினைஉற்பத்தி செய்து வந்திருக்கி றோம் என்பதுதான் எமக்கெல்லாம் தெரிந்த விடயம். அந்தப் பனாட்டினை பல வகை களில் , பல வடிவங்களிலெல்லாம் கவர்ச்சிகரமான முறையில் பக்கற்றுக்களில் இட்டு பல இடங்களிலும் விற்பனைக்கு வைத்திருப்பதை இன்று காணும் பொழுது மிகவும் ஆனந்தமாகவே இருக்கிறது. பொதி செய்யப்பட்ட விதத்தில் பனாட்டும் நவநாகரிகத்தினுள் தன்னை நிலை நிறுத்தும் விதத்தில் வந்து நிற்கிறது என்பது நல்லதொரு ஆரோ க்கியமான நிலை என்றுதான் கொள்ள வேண்டி இருக்கிறதல்லவா !

பனம்பழம் என்பதைச் சாதாரணமாக எடைபோட்டுவிடக் கூடாது. பனம் பழத்தின் களி என்றதும் பனங்காப் பணியாரம் மட்டுந்தான் எங்களின் நினைவில் வந்து நிற்கும். பனங்களியின் சுவையினைப் பனங்காப் பணியாரம் மூலம் சுவைத்து உணர்ந்தவர்களுக்கு அதன் அருமை தெரியும். பனங்களியில் பணியாரம் செய்யும் நிலை கட ந்து , பனங்களியானதுமேலும்பலஉணவுப் பதார்த்தங்களை உருவாக்கி நிற்கும் அளவுக்கு தற்போது வந்திருக்கிறது என்பதுதான் முக்கியமாகும்.

நாகரிகம் என்னும் நிலையானது முன்னேற்றத்தின் படியாக இருக்கிறது என்பதை மறுத்துவிடல் முடியாது. அதே வேளை பாரம்பரியமான பலவற்றைப் பாரா முகமாக்கியும் , அதனைப் பற்றியே கருத்தில் எடுக்காமலும் , அத்தனையும் ஓரங்கட்டப்பட்டு வைக்கும் படியும் ஆக்கி இருக்கிறது என்பதையும் மறந்து விடவும் கூடாது. இப்படி ஆக் கப்பட்டன உணவுகளாகவும் இருக்கும். பழக்க வழக்கங்களாகவும் கூட இருக்கும் என் பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்த வகையில் எங்களின் சொந்தப் பழமான பனம்பழமும் பலரால் ஓரங்கட்டலுக்கு ஆளாகி விட்டது. ஓரங் கட்டப்பட்ட பனம்பழத் தின் அருமையைப், பெருமையை மனமிருத்திய பலரின் நல்நோக்கால் இன்று பனம் பழம் மக்கள் மத்தியில்புதியவடிவில்காட்சிதந்து சுவையினையும், பயனினையும் வழங்க வந்திருக்கிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்.............

4ம் பக்கத்தொடர்ச்சி...

பயிற்சியினைப்பூர்த்திசெய்தவர்களுக்குச் சான்றிதழகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

பனங்களியினை உற்பத்தி செய்கின்ற இடங்களாக இலங்கையில் , யாழ் மாவட்டம் , மன்னார் மாவட்டம் , திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், புத்தளம் மாவட்டங்கள்இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் -நெடுந்தீவிலும், சிங்கைநகரிலும், மன்னாரில் படப்பாடியிலும், திருகோணமலையில் வரோரதயநகர் பகுதியிலும், மட்ட க்களப்பில் முகத்துவாரம் பகுதியிலும், புத்தளத்தில் கற்பிட்டிப் பகுதியிலும் பனங்களி உற்பத்தி நிலையங்கள் அமையப் பெற்றி ருக்கின்றன என்பது மனங்கொள்ளத்தக்கதா கும்.



பனங்களியினைப் பயன்படுத்திப் பலவித உற்பத்திகள் வந்திருக்கின்றன. அவற்றின் வகைகளைப் பார்த்தால் எமக்கெல்லாம் ஆச்சரியமாகவே இருக்கும்.பனாட்டின் வகைகளான பாணிப்பனாட்டு, தோற் பனாட்டு ஆகியவற்றை ஏற்கனவே பார்த்தோம். அதை ப்பற்றி எங்கள் அனைவருக்குமே நன்றாகவே தெரிந்தும் இருந்தது. அதுமட்டுமல்ல அந் தப் பனாட்டுகளை நாங்களாகவே எங்கள் பாட்டில் வீட்டிலேயே எந்தவித நவீன தொழி ல் நுட்பங்களையும் பயன்படுத்தாமல் பதப்படுத்தி பக்குவமாய் எடுத்துச் சுவை த்தும் வந்திருக்கிறோம். அந்த நிலை கடந்து தற்போதுநவீனதொழில்நுட்பங்கள்உட்புகுந்து பனங்களியிலிருந்து புதுப் புது உற்பத்திகள் எம்மையெல்லாம் வரவேற்று நிற்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய நிலை எனலாம்.

பனம்பழத்தினைக் கைகளால் பிசைந்து எடுத்தார்கள். அப்பொழுது சுகாதாரம் கடைப் பிடிக்கப்பட்டதா என்றால் அது ஐயத்துக்கு இடமாகவே இருந்தது எனலாம். பனம் பழத்தி னை கிடைத்த பாத்திரத்தினுள் நீரினை விட்டு பிசைந்து எடுப்பது என்பது சாதா ரண மாக அப்பொழுது இருந்தது. அப்படி எடுக்கும் பொழுது பனம்பழங்களை அதிகள வில் எடுப்பது கஷ்டமாகும். ஒரு பழத்தை அல்லது இரு பழத்தை மட்டுமே களியெ டுத்திடப் பயன்படுத்தக் கூடியதாகவே இருக்கும். அப்படி எடுத்த பின்னர் வருகின்ற பனங்களி யினை உரிய முறையில் பாய்களில் காயவிடும் பொழுதும் அதில் பெரிய கவனத்தைச் செலுத்திய நிலை இருந்ததா என்றால் இல்லை என்றுதான் சொல்ல லாம். ஆனாலும் அப்பொழுது அதுதான் பொருத்தமான நிலையாக இருந்தது.

ஆனால் இன்று நிலை மாறிவிட்டதையே காணுகின்றோம். பனம் பழமானது குளிர்ந்த நீரிலும் , சுடு நீரிலும் அத்துடன் உணவு தற்காப்புப் பதார்தங்களாலும் கழுவிச் சுத்தப் படுத்தப்படுகிறது.அதன் பின் தோலகற்றப்பட்டு மென்மையாக்கும் இயந்திரத்தினுள் அளவான நீர் விட்டு உள்ளே செலுத்தப்படுகிறது. அதன் பின்னர் விதைகள் தும்புகள் யாவுமே வடிகட்டல் முறையின் மூலம் பிரித்தெடுத்தல் நடை பெறுகிறது.

இயந்திரங்களிலிட்டு வெளிவந்த துப்பரவு செய்யப்பட்ட பனங்களியினை , பொருத்தமான கொள்கலன்களுக்கு மாற்றல் இடம் பெறுகிறது. அப்படி மாற்றும் பொழுது தேவையான அமிலத்தன்மை கவனத்தில் கொண்டு சரிசெய்யப்படுகிறது என்பது முக் கியமாகும். சுத்தமாய் எடுக்கபடும் பனங்களியானது எப்படியெல்லாம் உருவெடுக்கி றது என்பதை அறியும் ஆவல் எழுகிறதல்லவா !

பனம்பானமாகிறது. பனங்கோடியலாகிறது. அத்துடன் அமையாது, பனம்பழ ஐஸ் கிறீம், பனம்பழ ஜாம், பனம்பழ யோக்கட், பனம்பழச் சொக்கிலேற், பனம்பழக் கேக் , பனம் பழக் குக்கீஸ், என்று பல அவதாரங்களில் வந்து எம்மையெல்லாம் ஆச்சரியத் துக்குள் ஆட்படுத்தி நிற்கிறது பனங்களி.அத்தனையும் இன்று விற்பனைக்கு வந்து யாவரும் விரும்பி வாங்கிச் சுவைக்கும் நிலைக்கு வந்துவிட்டது என்பது தான் மிகவும் முக்கி யமாகும்.

பனங்களியினை எடுத்துப் பல பொருட்கள் செய்யப்படுவதை அறிகிறோம். அவற்றின் செய்கை எப்படி அமைகிறது என்று பார்ப்பதும் முக்கியமல்லவா ? குடிக்கும் நிலை யில் வந்து நிற்கும் பானங்களின் ஒரு நிலைதான் கோடியல் ஆகும். கோடியல் தயாரிப்பில் சீனிப்பாகு வந்து நிற்கிறது. சீனியைப் பாகாக அதாவது 70 பரனைற்று பாகையாக காய் ச்சி எடுக்கப்படுகிறது. பின்னர் அதனுடன் துப்பரவு செய்யப்பட்ட பனங்களியினையும் சேர்த்துக் காய்ச்சப்படுகிறது. பதப்படுத்தலுக்காக சோடியம் பென்சோயிற், சிற்றிக் அமிலம் , ஆகிய இரசாயனப் பதார்த்தங்கள் கலக்கப்படுகிறது.அதன் பின்னர் அந்தக் கலவையானதுசுத்திகரிக்கப்பட்ட போத்தல்களில் இடப்பட்டு விற்பனைக்கு ஆயுத்த மாகிறது. போத்தலில் வருகின்ற கோடியலை குளிர்ந்த நீரிடன் கலந்தால் பருகுவதற் குச் சுவையான பானம் வந்துவிடும். தாகமும் தீரும் ! பனப்பழத்தின் சுவையும் பக்குவ மாய் அமையும் !

பனம்பழ ஜாம் என்பது புது வரவேயாகும். ஜாம் செய்யும் பழங்கள் பெரும்பாலும் இனிப்புச் சுவை மிக்கனவாகவே இருக்கும். பனம்பழத்திலோ ஒரு காறல் தன்மையும் இருப்பது அதன் இயல்பேயாகும். அப்படி இருக்க எப்படி ஜாமினைச் எப்படிச் செய்ய முடியும் என்றொரு ஐயம் எழலாம் அல்லவா ? காறல் தன்மை இருந்தாலும் பனிரெ ண்டு தொடக்கம் பதினைந்து விகிதம் வரையான சீனியும் பனங்களியில் இருப்பது தான் ஜாம் செய்வதற்கு வாய்ப்பினை வழங்கி இருக்கிறது எனலாம்.சில பனம்பழங் களில் காறல் தன்மையானது குறைவாகவும் இருக்கும்.அவற்றை நேரடியாகவே ஜாம் செய்யப் பயன்படுத்துவார்கள். காறல் தன்மைமிக்க பனம்பழங்களின் களியின் காறல் தன்மை யினைப்போக்க அமிலோஸ் என்னும் பதார்த்தம் பயன்படுத்தத்தப்பட்டு ஜாம் தயாரி ப்பது இலகுவாக அமைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கோடியலைவிட இன்னுமொருவகையிலும் பனங்களி அருந்தும் பானமாய் அமைகின்றது. அதாவது இதனை பனம்பழ எசன்ஸ் என்று அழைக்கலாம். எழுபது விகிதம் கொண்ட மதுசாரத்துடன் பனம்பழச் சாற்றினை சில நாட்கள் ஊறவைத்து அதனை நீராவி முறையில்வடிகட்டிஅதிலிருந்துஎசன்ஸின்பிரித் தெடுக்கப்படுகிறது. இப்படியான எசன்ஸினைப் போத்தல்களில் அடைத்து விற்பனை செய்யும் நிலையும் இன்று ஏற்பட்டிருக்கிறது. இவ்வகையான எசன்ஸுகள் பக்கற்றாகவும் விற்பனை செய்யக் கூடி யதாக இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கதாகும். பனங்களியினைப் பயன்படுத்தி , பனங்களித் தோசை செய்யலாம். பனங்களிப் புடிங்கும் செய்யலாம். அதுமட்டு மல்லாமல் பனங்களித் தொதுலும் செய்யலாம். அத்துடன் பனங்களியில் பாயாசமும் செய்து சுவை த்திடலாம் என்பதும் இனிப்பான செய்திகளாய் இருக்கிறதல்லவா !

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் பக்க பலத்துடன் பனை அபிவிருத்திச் சபையானது இந்தப் பொருட்களையெல்லாம் தரமாய், சுகாதாரமாய் யாவருக்கும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். ' கற்பகம் ' என்னும் பெயர் தாங்கிய வியாபார நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் – நெல்லியடி, நல்லூர், சுன்னாகம்,பகுதிகளிலும் அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் காலி வீதியிலும், பத்தர முல்லையிலும், மன்னார் மாவட்டம், மட்டக்கள ப்பு மாவட்டம் , திருகோணமலை , வவுனியா, அம்பாறை மாவட்டங்களிலும் கற்பகத ருவாம் பனையின் பொருட்களை மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கும் வகையில் அமைந்திருக்கின்றன என்பது கருத்திருத்த வேண்டிய முக்கிய விடயமாகும்.




இலங்கையில் பனை அபிவிருத்திச் சபையின் முன்னெடுப்பினால் பனம்பழமும் அதன் களியினால் தயாரிக்கப்பட்ட பொருட்களும் வந்தது போல் இந்தியாவிலும் ஒரு அமை ப்பினால் பனம்பழம் தொடர்பான பொருட்கள் வந்திருக்கின்றன என்று அறிந்திடக்கூடியதாக இருக்கிறது.தமிழ்நாட்டில் மார்த்தாண்டபுரம் என்னுமிடத்தில் பால்மா என்னும் அமைப்பினைச் சேர்ந்த பெண்கள் பனம்பழத்தினைக்கொண்டு பதார்த்தங்களைச் செய் யத் தொடங்கி இருக்கிறார்கள். பனம்பழத்தில் ஜூஸ், பனம்பழத்தில் ஜாம் என்ப வற்றைத் தயாரிப்பதற்கு உரிய பயிற்சிகளை அங்கிருக்கும் பால் ராஜ் என்பவர் வழங்கி வருகிறார்.இராமநாதபுரம் மன்னர் சேதுபதி பனைத்தொழில் கல்லூரி மற்றும் சுதேச பனை ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து பனம்பழத்தைத்தைப் பயன்படுத்திப் பல உணவுப்பொருட்களையும், மருந்துகளையும் தயாரிப்பதற்கான பயிற்சிப்பட்டறை களை நடத்தி வருகிறார்கள் என்பது கருத்திருத்த வேண்டிய செய்தியெனலாம்.

பனம்பழத்தினைக் கொண்டு பலபதார்த்தங்கள் புதிய வரவாகவே வந்திருப்பதைப் பார்த்தோம். இவை அனைத்துமே நாங்கள் சுவைத்து மகிழ்ந்திடவே வந்திருக்கின்றன. அதேவேளை பனம்பழமானது வேறு வகையிலும் பயன்பட்டிருக்கிறதுஎன்பதையும்தெரிந்திருப்பது நல்லதல்லவா ? பனம்பழத்தில் சவர்க்காரம், பனம்பழத்தில் ஷாம் போ , பனம்பழத்தில் முகத்துக்கு பூசப்படும் வண்ணக்குழம்பு, என்றெல்லாம் வந்திரு க்கிறது. இலங்கையில் உள்நாட்டுப்போர் நடைபெற்ற காலப் பகுதியில் யாழ்ப்பாண த்தில் பல பொருட்களுக்குப் பெருந் தட்டுப்பாடு காணப்பட்டது. அதில் சவர்க்காரமும் ஒன்றாகும். சவர்க்காரம் என்பது யாவருக்கும் மிகவும்அவசியமானதொன்றாகவேஇருந்தும் வருகிறது. உடைகளைச் சுத்தமாக்கிடத் துணையாய் அமைவது சவர்க்காரம் தானே ! சவர்க்காரம் கிடைக்காத நிலையில் அதற்கு மாற்றீடாக ஒரு பொருள் அப் பொ ழுது வந்தது. அதுதான் பனங்களியினாலாகிய சவர்க்காரமாகும். தெரு ஓரங்களில் வைத்து யாழ் ப்பாணப் பகுதிகளில் விற்கப்பட்டதை அக்காலத்தில் அங்கிருந்தவர்கள் மறந்திருக் கவே மாட்டார்கள்.சுவைத்திட உதவிய பனம்பழம் உடையினைச் சுத்தப்ப டுத்தவும் உதவிநின்றது என்பது கருத்திருத்த வேண்டிய விடயமல்லவா !

பனம்பழத்தினை நாங்கள் மட்டுமே விரும்பி நிற்கவில்லை. எங்களின் ஆடுகளும் மாடு களுமே விரும்பி நின்றன என்பதும் நோக்கத்தக்கதாகும்.பனையால் விழுந்த பனம்பழம் வெடித்து நிலத்தில் கிடப்பதை மாடுகள் கண்டால் போட்டி போட்டுக் கொண்டு அத னைச் சுவைத்திட நிற்பதை நாமனைவருமே கண்டிருக்கிறோம். சில வேளைகளில் ஒரு பனம்பழத்தினையே இரண்டு மாடுகள் இழுத்து முட்டி மோதிக் கொள்ளுவதையும் பார்த்தும் இருக்கிறோம். அந்த அளவுக்கு மாடுகளுக்கு மிகவும் பிடித்தமான பழமாகவே பனம்பழம் இருந்திருக்கிறது.பனம்பழத்தினை நீர்விட்டுக் கசக்கிப்பிழிந்துஎடுத்துஅதனுடன்சிலவேளை தவிட்டினைக் கலந்தும் கலவாமலும் ஆடுகளுக்கும் மாடுகளுக் கும் கொடுப்பது பனம்பழக் காலங்களில் வீடுகளில் இடம் பெற்றேவந்திருக்கிறது. ஆடுகளும்மாடுகளும் மிகவும் பிரியத்துடன் பனம்பழச் சாற்றினைச் சுவைத்து தலை யினை ஒரு ஆட்டு ஆட்டி களைப்புத்தீர்ந்து விட்டது என்று தலையினை உயர்த்திநிற்கும்நிலைஇன்றும்கண்ணுக்குள் நிற்கிறது.

**( கற்பகதரு என்னும் அற்புதம் தொடரின் முதலாம் பகுதி நிறைவு பெறுகிறது. அடுத்த பகுதி பிறக்கும் புதுவருடத்தில்தொடங்கும்.ஆவலுடன் காத்திருங்கள் )**

# கிண்ணியா, அண்ணல் நகர், அல்–ஹிதாயா மீனவர் கூட்டுறவுச் சங்க மீனவர்களுடன் ரிஷாத் சந்திப்பு!

திருகோணமலை மாவட்டத்திற்கு சனிக்கிழமை விஜயம் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், கிண்ணியா, அண்ணல் நகர், அல்-ஹிதாயா மீனவர் கூட்டுறவுச் சங்க மீனவர்களை சந்தித்துக் கலந்துரையாடியதுடன், கடற்தொழிலில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.

இந்த சந்திப்பில் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதி அமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்றூப், அதிபர் எம்.எஸ்.ஏ.அப்துல் அஸீஸ் மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (05)





காலைக்கதிர்
Kalaikkathir

# முட்டை விலை அதிரடியாக குறைப்பு அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம்!

இறக்குமதி செய்யப்படும் முட்டைகள்லங்காசதொசஊடாக35 ரூபாஎன்றவிலையில்விநியோகிக்கப்படும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 மில்லியன் முட்டைகள் நேற்று முதல் விற்பனைக்காக சந்தைக்கு வெளியிடப்பட்டுள்ளன.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரதிணைக்களத்தின்அனுமதியுடன் உரிய முட்டைகள் லங்கா சதொச நிறுவனத்திற்கு நேற்று முதல் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, சதொச கடைகளின் ஊடாக மக்கள் பண்டிகைக் காலங்களில் முட்டைகளைத் தட்டுப்பாடு இன்றி கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மேலும் 15 மில்லியன் முட்டைகள் நாட்டுக்கு இறக்குமதிசெய்யப்படவுள்ளதுடன், அந்தகையிருப்புக்களைவிரைவில் தரப்பரிசோதனைக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் முட்டை விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததால், நுகர்வோர் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

எவ்வாறாயினும், முட்டை இறக்குமதியை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், உள்ளூர் முட்டை ஒன்றின்விலைமீண்டும்55முதல் 65 ரூபா வரை அதிகரித்துள்ள நிலையில், மீண்டும் முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில் எதிர்காலத்தில் பல அதிகார வரம்புகளின் கீழ் இந்தியாவில்இருந்துமுட்டைகளை இறக்குமதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு பாதணி வவுச்சர்கள் வழங்கும் திட்டம் ஆரம்பம்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வைக்குஅமைவாகஅமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் வழிகாட்டலின் பேரில் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பாதணி வவுச்சர்களை வழங்கும் செயல்பாடு கிழக்குமாகாணஆளுநர்செந்தில் தொண்டமான் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள 677 கிராமிய பாடசாலைகளைச் சேர்ந்த 1,57,698 மாணவர்களை இனங்கண்டு 3000 ரூபா பெறுமதியான இலவச பாதணி வவுச்சர்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டது. (05)

# நாட்டில் போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு பிணை வழங்கவேகூடாது என்கிறார் மைத்திரி!



போதைப்பொருள்களுடன் கைது செய்யப்படுவர்களுக்கு பிணை வழங்கப்படுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக்; கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது நாட்டின் நீதிமன்றங்களில் 13 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவழக்குகள்விசாரணைக்காக உள்ளன. தற்போது 14 லட்சத்தை இது நெருங்கியுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் தாமதமடைவதால், அந்த வழக்குகளில் தொடர்புடையகுற்றவாளிகள்இன்னும் பல குற்றங்கில் ஈடுபடுவார்கள்.

தற்போதைய அரசாங்கம், ஐஸ். அஷிஸ் உள்ளிட்ட போதைப் பொருள்களுடன் கைது செய்யப்படுவர்களுக்கு பிணை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறைச்சாலைகளில் இடவசதி இல்லாதமையே இதற்கான காரணமாகும். இது உண்மையில் வேடிக்கையான விடயமாகும்.

இந்தநாட்டில்போதியளவுஇடவசதி உள்ளது. இராணுவம் நினைத்தால் ஒரே மாதத்தில் அங்கு புனர்வாழ்வு நிலையங்களை அமைக்க முடியும்.

நீதிமன்றங்களில்நிலுவையிலுள்ள வழக்குகளைத் துரிதமாக முடிக்க வேண்டும். சில வழங்குகள் 20 வருடங்கள் நடக்கின்றன.

இன்னும் சில வருடங்கள், 3 தலைமுறைகளாகக்கூட நடந்து வருகின்றன. குறைந்தது6மாதங்களில் வழங்குகளை முடிப்பதற்கான சட்டங்களை நாடாளுமன்றில் கொண்டுவர வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஊராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

தொடர்புகளுக்கு: 0777 43 5557

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## அயலுறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாவிட்டாலும், மேம்பட்ட பயிற்சி இருந்தால், அந்த உபகரணத்தின் குறைபாடுகளைக் கூட நிவர்த்தி செய்துகொள்ள முடியும். எல்லாவற்றுக்கும் அடிப்படையான சிறந்த கல்வி முறையைக் கொண்டிருப்பது, இலங்கையில்உள்ளஎமக்குவிசேட அனுகூலமாகும். எனவே, இங்கு வருபவர்களும் சிறந்த கல்வியைப் பெற்று வருபவர்கள் தான்.

இதுவரையில் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் செயற்பட்டுவருகின்றோம். அதனை நாட்டின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கையின் ஒட்டுமொத்த அங்கமாக நாம் கருதவில்லை. அதுதான் இங்கு நாம் செய்த வேறுபாடு. இது நமது வெளியுறவுக் கொள்கை மற்றும் நமது பாதுகாப்புக் கொள்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

எனவே, எடுத்துக்காட்டாக, இலங்கையின் புதிய வெளியுறவுக் கொள்கையில், அமைதி காத்தல், காலநிலை மாற்றம், சர்வதேச உறவுகளில் எமக்கு முக்கியமான பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்படும்.

இனி, அது வெறும் அரசியல் உறவுகளோ அரசியலோ அல்ல. இது தொடர்பாக நாம் அண்டை நாடுகளுக்குகுறிப்பாகமாலைதீவுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்கக்கூடிய சேவைகள் குறித்து தெரியப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சேவைகள்கட்டளைத்தளபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். இந்த நாடுகளுக்குச்சென்றுஎமதுமுடிவை அறிவிக்குமாறும் இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஆகியோரிடம் கூறினேன்.

இன்று, ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும்படையில்இலங்கையின் பங்கு தொடர்பாக முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு உங்களைவாழ்த்துகிறேன். மேலும் நிச்சயமாக அந்தப் பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுப்பேன். மேலும், நிதி அமைச்சு இல்லாமல் இவை எதுவும் சாத்தியமில்லை என்பதை நினைவூட்டுகிறேன், எனவே நிதியமைச்சையும் சேர்த்து இந்த முன்மொழிவுகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றி கலந்துரையாட விரும்புகிறேன்.

அமைதி காக்கும் பணியில் இலங்கை பெரிய பங்களிப்பை வழங்குவதைபார்க்கவிரும்புகிறேன். ஆனால் அமைதி காக்கும் பணியே மாற்றமடைந்து வருவது சிக்கலாக மாறியுள்ளது. 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட காலத்தில் இருந்த விதத்தில் இருந்து அது மாறிவிட்டது.

1956 இல் பிரிட்டன் தோல்வியடையும்வரைஅமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் பிரிட்டன் ஆகியவை உலக வல்லரசுகளாக இருந்தன. அந்த உலகளாவிய நிலைப்பாட்டின் முடிவில், அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அமைதி காக்கும் படைகளை நிலைநிறுத்த ஒப்புக்கொண்டன. அதன்காரணமாக பல பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட முடிந்தது.

உதாரணமாக, கொங்கோ உள்நாட்டுப்போரின்போது, நாங்கள் எமது இராணுவத்தை அனுப்பியது எனக்கு நினைவிருக்கிறது. இன்று நிலைமை வேறு. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, அமெரிக்காவும்சீனாவும்இணைந்து செயல்பட்ட சகாப்தம் முடிந்துவிட்டது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு, பாரம்பரியக் கூட்டணிகள் சிதைந்து, சுயேச்சைக் குழுக்களும், அரச சாரா நிறுவனங்களும் தோன்றின.

உண்மையில்,இன்றையபுவிசார் அரசியலின் சிக்கலான நிலையில், ஆபிரிக்க ஒன்றியம் சில அமைதி காக்கும் முயற்சிகளையும் சட்டம் ஒழுங்கை அமல்படுத்துவதையும் மேற்கொண்டுள்ளது. இது தற்போது இன்னும் சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இன்று, ஒருபுறம், உக்ரைனில் போர் உள்ளது. இது ஒரு தீர்வை எட்டத் தவறிவிட்டது, இதன் விளைவாக ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும்இடையேஉறுதியற்ற தன்மைஏற்பட்டுள்ளது. பொருளாதார தடைகள் விதிக்கப்பட்ட போதிலும், ரஷ்யா அதிலிருந்து விழவில்லை. இருப்பினும், இது ரஷ்ய சுற்றுலா மற்றும் முதலீட்டில் அதிகரிப்பைக் காட்டியது.

இது இப்போது மத்திய கிழக்கு முதல் மேற்கு ஆசியா மற்றும் நம் நாட்டிற்கும் வருகிறது. ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருவது அதிகரித்துள்ள நிலையில், அவர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்குக் கூட முயற்சிப்பதாகத் தெரிகிறது.

மற்றொருபிரச்சினைதாய்வான். இதில் அமெரிக்கா ஒரு சுதந்திர அரசுக்கு ஆதரவளித்தால், இப்போது அவர்கள் ஷெங்ஹெய் உடன்படிக்கைக்கு அப்பால் சென்றுள்ளனர். இது மற்றொரு சிக்கலான பிரச்சினை. அதேசமயம், இந்து சமுத்திரத்தில் சீனாவின் வகிபாகம் மாறுகிறது. அதன் மூலம் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்து மற்றொரு அமைப்பை உருவாக்கியுள்ளன.

அத்துடன் இன்னொரு மோதல் உருவாகி வருகிறது. அதுதான் காஸா போர். இது அரச சாராதவர்களால்தூண்டப்பட்டபோர். இந்தப் போரில் நாம் பார்த்த மிக மோசமான விடயம் பாரிய மனிதப் படுகொலையாகும். மேலும், அதில் தலையிடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு உள்ள வரையரைகளும் கவலையளிக்கின்றன. இவைதான் நமக்குள்ள பிரச்சினைகள்.

மேற்கு இந்தியப் பெருங்கடலில் அரச சாராதவர்களுடன் நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் போரை விட சிக்கலானதாகிவிட்டன. போதைப் பொருள் கடத்தல்காரர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின்தலையீடுஅவசியமானது எனத் தோன்றுகிறது.

அதற்கேற்ப, அரசியல் உருவாகும்போது, ஐ.நா. தூதுக்குழுக்களின் பணிகளின் தன்மையும் மாறுகிறது என்பதை புரிந்துகொள்ளலாம். எனவேஅமைதி காக்கும் நடவடிக்கைகள் புவிசார் அரசியலைப் பின்பற்றுகின்றன என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். ஆனால் புவிசார் அரசியல் அமைதி காக்கும் நடவடிக்கைகளை பின்பற்றுவதில்லை.

அதன்படி, அடுத்த சில ஆண்டுகளில் இது எவ்வாறு மாறுகிறது என்பதை நீங்கள் பார்க்கலாம். ஆனால் நாம் அதில் இருந்துவெளியேறவேண்டும்என்று அர்த்தமில்லை. இதை உணர்ந்து, 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டபோது எதிர்பார்த்ததை விட அதிகமானவர்களை இணைத்துக்கொள்ள நாம் திட்டமிட வேண்டும். அதனை உங்களிடம் ஒப்படைக்கின்றேன்.

மேலும், இங்கு இருக்கின்ற வருங்கால அதிகாரிகளில் ஒருவரேனும் ஐ.நா. தூதுக்குழு பணிகளில் இணைந்தால், அது இலங்கைஇராணுவத்திற்குமிகவும் முக்கியமானதாக இருக்கும். அது உங்கள் அனுபவத்திற்கு மேலும் வலு சேர்க்கும். இரண்டாவதாக, மாறிவரும் புவிசார் அரசியலுக்கு ஏற்ப,மாறிவரும்செயற்பாடுகளுக்கும் நீங்கள் தயாராக வேண்டும்.' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# மட்டக்களப்பின் அரச அதிபராக பதவியேற்றார் ஜஸ்ரினா யுலேக்கா!



மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபராக 'திருமதி. ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன்' தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

32 வருடகாலமாக இலங்கை நிர்வாக சேவையில் பல்வேறு பதவிகளில் இருந்த இவர், கடந்த 2022.01.07 ஆம் திகதி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த நிலையில், கடந்த 13 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பதவியேற்பு நிகழ்வில் புதிய மாவட்ட அரசாங்க அதிபரின் குடும்பத்தினர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# நாடாளுமன்றைக் கலைக்க ஜனாதிபதி ரணில் திட்டமாம்?

## சுமந்திரன் கூறுகிறார்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தை கலைத்துவிடுவாறோ? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பில்இடம்பெற்றஇலங்கை தமிழரசுக்கட்சியின் தொகுதிக்கிளை கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வலது பக்கம் சிக்னலை போட்டுவிட்டு இடது பக்கம் வாகனத்தை செலுத்துபவர் தான் எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. அவர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்போகின்றேன் என்று கூறும் போதே சந்தேகம் ஏற்படுகின்றது.

ஒருவேளை அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுகின்றாறோ என்று கூடத் தோன்றுகின்றது. - இவ்வாறு தெரிவித்துள்ளார்.(05)






# டெங்கு ஒழிப்பும் விழிப்புணர்வும்!

கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு மற்றும் பூச்சியியல் ஆய்வுகூடம் 15 பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, கல்முனை கிளையின் தலைவர் எஸ்.எல்.எம்.கரீம் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது.

இந் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர். இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இந்து ஆலயத்தின் முக்கிய பிரமுகர்கள், பள்ளிவாசலின் முக்கிய பிரதிநிதிகள், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார



பரிசோதகர்கள் மற்றும் கல்முனை மாநகர சபை ஊழியர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மஹல்லாவிலுள்ள அனைத்து தமிழ் முஸ்லிம் வீடுகளுக்கும் தொண்டர்கள் சென்று வீடுகளின் உள்பகுதி உட்பட சுற்றுப்புறங்களை பரிசோதனை செய்து டெங்கு தொடர்பான விழிப்புணர்வை வழங்கியதுடன் டெங்கு நுளம்பு பெருகும் பொருள்களை வீட்டிலுள்ளவர்களின் துணையுடன் அகற்றி மாநகர சபை



வாகனங்களில் ஒப்படைத்தனர். பொது அமைப்புக்களின் ஒத்துழைப்பு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருந்தால் தொண்டர்களின் கள செயற்பாடு ஹைறாத் பள்ளிவாசல் மஹல்லாவின் எல்லையை தாண்டி ஏனைய பள்ளிவாசல்களின் மஹல்லா எல்லை வரை விரிவடைந்து சென்றது.

இவ் வேலைத்திட்டத்தை





முன்னிட்டு தொண்டர்களுக்கு டெங்கு நோய், அதனை பரப்பும் நுளம்பின் வாழ்க்கை மற்றும் வாழ்விடம், வாழ்விடங்களை அகற்றும் வழிமுறை, களவேலையின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு பள்ளிவாசலில் நடைபெற்று இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மாணவர்களின் போதைப்பொருள் பயன்பாட்டை ஒழிக்கத் தென்னகோன் விசேட நடவடிக்கை!

பாடசாலைக்கு உள்ளே மற்றும் வெளியே முன்னெடுக்கப்படும் மாணவர்களுக்கு பொருத்தமற்ற போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதில்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகொன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமீப காலமாக நாட்டில் மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாடு உள்ளிட்ட பல்வேறு பொருத்தமற்ற செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் பொருத்தமற்ற செயற்பாடுகளை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு உள்ளே மற்றும் பாடசாலைக்கு வெளியே பிள்ளைகளுக்குப் பொருத்தமற்ற பல்வேறு விடயங்கள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வெளியாகின்றன.

பாடசாலைக்கு 500 மீற்றர் இடைவெளியில் காணப்படும் பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமற்ற விடயங்களை விநியோகிக்கும் மற்றும் மாணவர்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கும் போது இடம்பெறுவதற்கு நான் இடமளிக்க மாட்டேன்.

இது தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து பிரதேசங்களிலுமுள்ள பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன்.

போலிஸாரை ஈடுபடுத்தி பாடசாலைக்குள் மற்றும் வெளியில் முன்னெடுக்கப்படும் அனைத்து முறையற்ற நடவடிக்கைகளும் ஒழிக்கப்படும்.
- என அவர் மேலும் தொவித்துள்ளார். (05)

# யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தரின் உயிரைப் பறித்தது 800 ரூபா!

800 ரூபா கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் யாழில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியை சேர்ந்த இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சாரதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் இளைஞர் ஒருவரிடம் 800 ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ள நிலையில், அதனைத் திரும்பச் செலுத்தாததால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனையடுத்து இளைஞர் அந்நபர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ் நிலையில் சரணடைந்துள்ள குறித்த இளைஞனைக் கைது செய்த கோப்பாய் பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

# மாண்புடை மார்கழி !



மார்கழி என்பது மனநிறை மாதம்
மாதவன் மலரடி போற்றிடும் மாதம்
கோதையும் தமிழைக் கொட்டிய மாதம்
குவலயம் குளிர்மையாய் ஆகிடும் மாதம்
வாசகர் ஈசனைப் பாடிய மாதம்
மகேசனை மங்கையர் போற்றிடும் மாதம்
பூவெலாம் பனித்துகள் அமர்ந்திடு மாதம்
புவியினைத் தேவரும் விரும்பிடு மாதம்
வைகறை யாவரும் விழித்திடும் காலம்
மனமெலாம் இறையினை இருத்திடு காலம்
பொய்யெனும் மாயைப் போக்கிட இறையினை
மெய் யடியார்கள் வேண்டிய காலம்
உணர்வுடன் இறையினை உளமதில் இருத்தியே
துயிலினைக் களைந்திட தொடக்குவார் மங்கைகள்
பரமனைப் பாடியே தெருவெலாம் வருவதால்
பக்தியின் பேரொளி பரவிடும் காலமே

ஆலயம் எங்கனும் தீபங்கள் ஒளிர்விடும்
அடியவர் அனைவரும் ஆலயம் ஏகுவார்
காலையில் கதிரவன் எழுந்திடு முன்னரே
கனிவுடன் இசைத்தமிழ் காற்றிலே கலந்திடும்
மாதவன் கோவிலில் பாசுரம் ஒலிக்கும்
மகேசன் கோவிலில் வாசகம் ஒலிக்கும்
சைவம் வைணவம் சங்கமம் ஆகும்
சன்மார்க்க வழியை மார்கழி வழங்கும்

பீடை என்பது பொருத்தமே அல்ல
பீடுடை என்பதே பெரிதும் பொருத்தம்
மார்கழி தேவர்க்கு உகந்த நல்மாதம்
மனமதில் இருத்தியே பரவுவோம் இறையினை

மகாதேவ ஐயர்
ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்... ஆஸ்திரேலியா.



காலைக்கதிர் Kalaikkathir

# மில்கோ நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து ரேணுக விலகல்!



அரசாங்கத்தின் பால் உற்பத்தி மற்றும் விற்பனை நிறுவனமான மில்கோ நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து ரேணுக பெரேரா விலகியுள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் நிர்வாக செயலாளரான ரேணுக பெரேராகடந்தவருடம்ஜனவரிமாதம் மில்கோ நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர்கள் நலன் தொடர்பான பிரச்சினை ஒன்றை மையப்படுத்தி கடந்த ஒக்ரோபர் மாதம் மில்கோ நிறுவனத்தின்தலைவராகசெயற்பட்டு வந்த ரேணுக பெரேரா அதன் ஊழியர்களால், அலுவலகவளாகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையிலேயே, அவர்தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாகக்; கருத்துத் தெரிவித்த ரேணுக பெரேரா –

'நான் நிறுவனத்திலிருந்து பதவி விலகுவதாக ஜனாதிபதிக்கு, கடந்த 9 ஆம் மாதம், 16 ஆம் திகதியன்றே தெரிவித்துவிட்டேன்.

எனினும், அப்போது காணப்பட்ட அரசியல் நிலைமையால், சிறிது காலதாமதம் ஏற்பட்டது.

ஒரு சில குழுக்களுக்கு, தங்களுக்குத்தேவையானஒருவரை இதன்தலைவராகநியமிக்கவேண்டிய தேவையும் காணப்பட்டது.

இதனால், சிலர் அரசியல் ரீதியாகவும்செயற்பட்டார்கள். அரசாங்கம் இது தொடர்பாகக் கொள்கை ரீதியாக முடிவொன்றை எடுத்து செயற்பட்டு வருகிறார்கள். இனியும் இங்கே எனது காலத்தைச் செலவழிப்பது தேவையில்லாத ஒன்றாகும் என்பதே எனது நிலைப்பாடு. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கில்மிஷாவின் வெற்றிக் களிப்பை கொண்டாடும் அரியாலை மக்கள்



பிரபல தென்னிந்தியத் தொலைக்காட்சியான சீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுவரும்சரிகமபநிகழ்ச்சியின் இறுதிப்போட்டியில்இலங்கையைச் சேர்ந்த 'கில்மிஷா' வெற்றிவாகை சூடியுள்ளார்.

சென்னை நேரு உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற குறித்த போட்டியில் வெற்றிபெற்ற கில்மிஷாவுக்கு பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் கில்மிஷாவின் வெற்றியை அவரது ஊரான அரியாலையைச் சேர்ந்த மக்கள் கொண்டாடி வருகின்றனர். (05)

# பொருளாதார குற்றவாளிகளுடன் அரசியல் கூட்டணி இல்லையாம்!

## திஸ்ஸ அத்தநாயக்க திட்டவட்டம்



மக்கள் ஆணை இல்லாதவர்கள் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் குற்றவாளிகளுடன் எந்தவொரு அரசியல் கூட்டணியையும் உருவாக்க போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இதனைப் பயன்படுத்தி கட்சித் தலைமைக்கும் உறுப்பினர்களுக்கும் இடையில் பதற்றத்தை ஏற்படுத்த பலர் முயற்சித்து வருகின்றனர்எனஅக்கட்சியின் பிரதம அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள தேர்தல்கள் தொடர்பாக பிரதான எதிர்க் கட்சிகள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலக்கியவர்களோடு கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்து தேர்தல்களிலும் சஜித் பிரேமதாஸதலைமையிலான பாரிய கூட்டணியில் தாம் போட்டியிடவுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம்டலஸ்அழகப்பெருமதலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்களும் தம்மோடு இணைந்து செயற்பட்டு வருகின்றனர் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.(05)

# முட்டை இறக்குமதிக்கா வர்த்தக அமைச்சர் பதவி?

## முஜிபூர் ரஹ்மான் கேள்விக்கணை




இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்வதற்கா வர்த்தக அமைச்சர்ஒருவர்நியமிக்கப்பட்டுள்ளார் எனநாடாளுமன்றஉறுப்பினர்முஜிபூர் ரஹ்மான் கேள்வியெழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

முட்டையைக்கூடஅரசாங்கத்திற்கு தட்டுப்பாடின்றி வழங்க முடியாமல் உள்ளது.

இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்வதற்கா வர்த்தக அமைச்சர் ஒருவர் உள்ளார்?

இந்தசெயற்பாட்டைமேற்கொள்ள அமைச்சின் செயலாளரே போதும் தானே. எதற்காக அமைச்சர்?

இன்று அனைத்து தொழிலும் வீழ்ச்சியடைந்துவருகின்றன. சிறிய, மத்திய தொழில்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆடைத் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளமையால், சுமார் 6 ஆயிரம்பேர்வேலை இழந்துள்ளனர்.

எந்தவொருமுதலீட்டாளர்களுக்கும் நாட்டுக்குள் வர விருப்பமில்லை. இதனால்தான் நாம் புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் எனக் கூறுகிறோம்.பெரிய வெங்காயம் ஒரு கிலோ 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.இந்தப்பிரச்சினைக்கு தீர்வைக் காணாத அரசாங்கம் எப்படி ஏனைய பிரச்சினைகளை தீர்க்கப் போகிறது? – என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(05)

# போலித் தேர்தல் வாக்குறுதிகள் நாட்டை என்றும் முன்னேற்றாது!

## ஹர்ஷ சுட்டிக்காட்டு



அனைத்துக் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தேர்தல்நேரத்தில்மக்களைஏமாற்றுவதைவிட்டுவிட்டு, நாட்டின் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

2024ஆம்ஆண்டுஇரண்டுபெரியதேர்தல்களை எதிர்கொள்வதால் நாட்டிற்கு கடினமான ஆண்டாக இருக்கும் என்றும் மேலும் ஒவ்வொரு துறையிலும் பயனுள்ள மறுசீரமைப்பு இல்லாமல் நாட்டை முன்னேற்றாது என்பதை அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் இருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களிடம் பொய்யாகக் கூறிவந்தால் இந்த நாடு இன்னும் மூன்று மாதங்களிலேயே வீழ்ச்சியடையும் என்றும் ஆகவே அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்என்றும்ஹர்ஷ டிசில்வாதெரிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகள் இல்லை என அரசாங்கம் மார்தட்டிக்கொண்டாலும் நாடு நெருக்கடிக்கு முந்தைய நிலையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக மாதத்துக்கு ஒரு குடும்பம் ஒன்றுக்கு 75,000 ரூபா தேவைப்பட்ட நிலையில், அதே குடும்பத்திற்கு இப்போது குறுகிய காலத்திற்குள் 175,000 ரூபா தேவைப்படுவதாக புள்ளியியல் துறை சுட்டிக்காட்டியுள்ளது என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.(05)

# நாடளாவிய ரீதியில் வனவிலங்கு அதிகாரிகள் பணிப்பகிஷ்கரிப்பு!

வனவிலங்கு அதிகாரிகளால் நாடளாவிய ரீதியில் நேற்று (திங்கட்கிழமை)பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் உள்ளிட்டபல்வேறுகோரிக்கைகளை முன்வைத்து இப்பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2023இல் வெளியிடப்பெற்றது.